
மேகலா
பிக்சர்ஸ்
காஞ்சித் தலைவன்

# கதைச் சுருக்கம்

மகாவீரன் ஹர்ஷ மன்னனையே வென்று வாகைசூடிய சாளுக்கிய சக்ரவர்த்தி புலிகேசி. தனது பன்றிக்கொடி தென்னகத்திலும் பறக்க வேண்டுமென்று பேராசைகொண்டு அதற்கான சூழ்ச்சித் திட்டங்களை வகுக்கிறான்.

தென்னகத்தில் வலிவும் பொலிவும் கொண்ட பேரரசாகப் பல்லவநாடு செழித்தோங்கியிருந்தது. அந்த நாட்டின் நாயகன் நரசிம்ம பல்லவன்.

அவனது படைத்தளபதி பரஞ்சோதி. நரசிம்மனின் தங்கை பூங்குழலி, பரஞ்சோதியின் அன்புக் காதலி. எதிரிகளால் விரட்டப்பட்ட இலங்கை மன்னன் மானா. ஆருயிர் நண்பனான நரசிம்மனின் துணையை நாடி வருகிறான். வரும் வழியில் கப்பல் கவிழ்ந்து மானா, அவன் மனைவி சங்கை, குழந்தை மூவரும் பிரிக்கப்படுகிறார்கள். மானா நரசிம்மனை வந்தடைகிறான்,

நரசிம்மன், பரஞ்சோதி, மானா இந்த மூவரையும் தனித்தனியே பிரித்துப் பல்லவநாட்டின் பலத்தைச சிதைக்கவும், பல்லவநாட்டின் நட்புரிமை நாடுகளான உறையூர், கொடும்பாளூர், கொள்ளிடக்கரை ஆகியவற்றின் துணையைவெட்டி விடுவதற்காகவும் சூழ்ச்சித் திட்டம் வகுத்து, புலிகேசி மன்னன், தன் ஆளுகைக்கு உட்பட்ட ரேணாடு ஏழாயிரம் என்ற நாட்டின் ராணி, சோழகுமாரியைக் காஞ்சிக்கு அனுப்புகிறான். அவளுக்கு உதவியாகச் சதிகளை ஏற்பாடு செய்யப் பூவிக்கிரமன் என்டவனையும் அனுப்புகிறான். வழியில் சிற்பி ஒருவனைக்கண்டு காதல்கொள்கிறாள் சோழகுமாரி. அந்த சிற்பிதான் நரசிம்ம பல்லவன் என்று தெரிந்து மனமயக்கம் அடைகிறாள். நரசிம்மனின் அறிவும், ஆற்றலும் நீதிபரிபாலனமும் சோழகுமாரியைப் பெரிதும் கவர்கின்றன. அவள் வந்த வேலையை மறந்து நரசிம்மனையே மணந்துகொள்ளத் துடிக்கிறாள்.

சோழ குமாரிக்கும் அரசனுக்கும் உறவு ஏற்படுவதைப் பரஞ்ஜோதி விரும்பவில்லை. அரசன் நரசிம்மனுக்குப் பெண் கொடுக்கக் காத்திருந்த கொள்ளிடக்கரை அரசரும் ஆத்திரமடைகிறார். அவருடன் உறையூர்-கொடும்பாளூர் மன்னர்கள் சேர்கிறார்கள். இதற்கிடையே இலங்கை மன்னன் மானாவின் மனைவி சங்கையின் மீது பரஞ்சோதி பழிகூறக் கூடிய சூழ்நிலையொன்றை பூவிக்கிரமன் உருவாக்குகிறான். அந்தச் சதியை ஒரு பயங்கரமான சோதனையின் மூலம் அம்பலப்படுத்துகிறான் நரசிம்ம பல்லவன். மன்னனுக்கும் பரஞ்சோதிக்குமிடையே எழும் கசப்புக்களையெல்லாம் மாற்றி நல்லுறவை உருவாக்குமகாரியத்திலே தன்னையே தியாகம் செய்துகொள்ளத் தயாராகிறாள் பூங்குழலி.

மிகுதியை வெண்திரையில் காண்க!

# காஞ்சித்தலைவன் பாடல்கள்

## பாட்டு 1

இயற். ஆலங்குடி சோமு      பாடி: ஈஸ்வரி-பொன்னுசாமி குழு

அவனியெல்லாம் புகழ் மணக்கும்
அருமைக் காஞ்சி நகரம்—நம்ம
அருமைக் காஞ்சி நகரம்—அது
அழகுக் கெல்லாம் சிகரம்
தோரணம் கட்டிய வீதியிலே—தங்கத்
தேரோடி வரும் வேளையிலே
தோகை மயிலென ஆடிடுவோம்—காஞ்சித்
தரணியை வாழ்த்தியே பாடிடுவோம் (அவனி)
குலைவாழை தன்னைத் தானே விலை கூறுது—கரும்புக்
கூட்டத்திலே தென்றல் வந்து நடைபோடுது
மலையெல்லாம் கவிதை பொங்கும் சிலையாகுது—நம்ம
மகராசன் கனவு இங்கே நிறைவேறுது (அவனி
வலை வீசி மீன் பிடிக்கக் கடலிருக்கு—நீ
விளையாடப் பல்லவத்தின் மடியிருக்கு
கலைகாக்க நரசிம்மன் துணையிருக்கு—கண்ணே
கனியமுதே உன்னுலெந்தன் உயிரிருக்கு

## பாட்டு 2

இயற். கே. டி. சந்தானம்      பாடி: சௌந்தரராஜன்

கண்கவரும் சிலையே காஞ்சி தரும் கலையே
கவி பிறவா முன் பிறந்த தமிழகத்தின் நிதியே (கண்)
பகை முடிக்கப் பல வகையாம் படைக்கலங்கள் மோதும்-எழில்
சிலைவடிக்கச் சிறு உளியும் இருகரமும் போதும்
முகை வெடிக்கும் முறுவலெனப் பெண்ணிதழில் தெரிவாய்-சினம்
மூண்டெழுந்தால் ஆண்டவன் பேய்த் தாண்டவமும்
புரிவாய் தாண்டவமும புரிவாய் (கண்)
படிக்குமுன்னே செவியினில் தேன் பாயவரும் தமிழ்போல்—நான்
நினைக்குமுன்னே பலவடிவாய் நெஞ்சமெல்லாம் நிறைவாய்
எனக்கு முன்னே வாழ்ந்தவர்கள் எத்தனையோ கோடி அந்த
இடம் பெயர்ந்தார் பெருமையெல்லாம் தொடர்கதைபோல் தருவாய் (க

பாட்டு 3

இயற்: மு. கருணாநிதி                    பாடி. எல். ராகவன்–ஈஸ்வரி–குழு

தொகையறு

மதனன்: நீர்மேல் நடக்கலாம்
நெருப்பிலே படுக்கலாம்
நிலை தடுமாறினால் நினைத்ததைப் பேசலாம்
உலகம் சுத்துது எதனாலே நம்ப
உடம்பு சுத்துது அதனாலே
உலகம் சுத்துது எதனாலே?
வீரர்கள்: நம்ம உடம்பு சுத்துது அதனாலே
மதனன்: கலகம் வருவது எதனாலே?
கலயம் பொங்குது அதனாலே
கலகம் வருவது எதனாலே?
கலயம் பொங்குது அதனாலே
சொர்க்கம் தெரியுது எதனாலே
மயக்கம் வருகுது அதனாலே
சொர்க்கம் தெரியுது எதனாலே
கோரஸ்: மயக்கம் வருகுது அதனாலே                    [உலகம்
மதனன்: கண்ணைக் கவருது எதனாலே?—இவ
கன்னிப் பெண்ணு அதனாலே
கண்ணைக் கவருது எதனாலே?
கோரஸ்: இவ கன்னிப் பொண்ணு அதனாலே
மதனன்: கன்னிப் பொண்ணு..... ம்...ம்...
கன்னத்தில் கண்ணு
சிங்காரி: உலகம் சுத்துது எதனாலே?
கோரஸ்: நம்ம உடம்பு சுத்துது அதனாலே                    [உல

பாட்டு 4

இயற்: ஆலங்குடி சோமு                    பாடியவர்: பி. பானுமதி

மயங்காத மனம் யாவும் மயங்கும்—அலை
மோதும் ஆசைப் பார்வையாலே                    (மயங்காத)
அழகின் முன்னாலே...ஓ ராஜா
அடிமையன்றோ உலகம்?
அறிந்து கொள்வீரா...ராஜா                    (மயங்காத)
கன்னத்திலே பழத்தோட்டம்
கண்களிலே சதிராட்டம்

கட்டழகுப் பெண் சிரித்தால்
காளையர்க்குப் போராட்டம்
உணர்ந்து கொண்டாலே
உறங்கிடுமோ இளமை
உறவு கொஞ்சாதோ...ராஜா (மயங்காத)
கருமுகில் காணவரும்
கண்டவுடன் நாணமுறும்
கன்னி எந்தன் கூந்தலுக்கே
கப்பம் கட்டி வாழ்ந்து வரும்
புதுமை கண்டாலே
பசித்திடுமோ...உமக்கு?
பொறுத்திடுவீரா...ராஜா (மயங்காத)

பாட்டு 5

இயற்: ஆலங்குடி சோமு பாடி: சௌந்தரராஜன்-சுசீலா

பூங்குழலி: வானத்தில் வருவது ஒரு நிலவு—இளம்
வயதினில் வருவது ஒரு நினைவு
பரஞ்சோதி: நாணத்தில் பெண்ணுக்கு அழகுவரும்-அதை
நாடி வந்தால் புதுஉலகு வரும்
பூங்: நானென்ற தனிமை அடங்கிவிடும்-அங்கு
நாமென்ற இனிமை தொடங்கிவிடும் (வானத்தில்)
பரஞ்: மாந்தளிர் மெல்லிடை ஆடிவரும்—அதை
ஏந்திடக் கைகள் தாவி வரும்
பூங்: தீங்கனி இதழில் கதைவளரும்—கண்கள்
தேடிய சுகத்தில் அமைதி பெறும் (வானத்தில்)
பரஞ்: கோடையும் குளிராய் மாறிவரும்-அதில்
கோடி இன்பம் ஊறி வரும்
பூங்: மணமேடையின் திருநாள் மலர்ந்து வரும்-அதில்
மோகன வாழ்வு கனிந்து வரும்

பாட்டு 6

இயற்: ஆலங்குடி சோமு பாடி: சௌந்தரராஜன்

(தொகையறா)

மக்களொரு தவறு செய்தால்
மாமன்னன் தீர்ப்பளிப்பான்
மன்னவனே தவறு செய்தால்
மாநிலத்தில் யார் பொறுப்பார்?

நினைத்து வந்த செயலொன்று
நடந்துபோன கதையொன்று
நீதி தேவன் காலடியில்
வீழ்ந்துவிட்டேன் நான் இன்று (நினைத்து)
இருட்டினில் தவித்த இருவரைக் காக்க
ஏற்றிட முயன்றேன் ஒரு விளக்கை
அந்த இருட்டினில் நானே மூழ்கிவிட்டேன்
இங்கு யாரிடம் சொல்வேன் என் வழக்கை? (நினைத்)
முறைகெட்ட மன்னனுக்கு முடியெதற்கு?
நெறிகெட்ட நெஞ்சிற்கு நினைவெதற்கு?
கறைபட்டுப்போன இந்தக் கரமெதற்கு?
இந்தக் கரமெதற்கு?

பாட்டு 7

இயற்: ஆலங்குடி சோமு பாடி: சௌந்தரராஜன்-சுசீலா

நரசிம்மன்: ஒரு கொடியில் இரு மலர்கள் பிறந்ததம்மா
—பிறந்ததம்மா
அண்ணன் தங்கை உறவு முறை மலர்ந்ததம்மா
—மலர்ந்ததம்மா (ஒரு)

பூங்: ஒரு கொடியில் இருமலர்கள் பிறந்ததம்மா-பிறந்ததம்மா
அண்ணன் தங்கை உறவுமுறை மலர்ந்ததம்மா-மலர்ந்ததம்மா
(ஒரு)

கருமணியின் துயரம் கண்டு இமைகள் தூங்குமா-அண்ணன்
கண்ணீரில் மிதந்திட என் இதயம் தாங்குமா?

நரசி: வரும் புயலை எதிர்த்து நின்று சிரிக்கின்றேனம்மா-தங்கை
வாழ்வுக்காக என் சுகத்தைக் கொடுக்கின்றேனம்மா (ஒரு)

பூங்: பிறவி என்னும் பாதையிலே உன்னுடன்வந்தேன்-அந்த
பயணத்திலே கடமைசெய்யும் துணிவையடைந்தேன்

நரசி: சிரகடிக்கும் ஆசைகளைச்சிறையில் பூட்டுவேன்-நீ
சிரித்திருக்கும் காட்சியிலே மனதைத் தேற்றுவேன்

பாட்டு 8

இயற்: ஆலங்குடி சோமு பாடியவர்: பி. சுசீலா

உயிரைத் தருகின்றேன்—தாயே
ஊரைக் காப்பாயே
அகமும் புறமும் பாடிய மண்ணில்
அந்நியர் பாதம் படலாமோ
தொகை தொகையாக பகைவர் வந்தாலும்
தகர்த்தெறியாமல் விடலாமோ? (உயிரை)

களமதில் நின்று எதிரியை வென்று
தலைகளை எண்ணும் கரமெங்கே?
உலகம் வியந்த திறமை சுமந்து
உறங்காத வீரக் குணமெங்கே? (உயிரை)

[தொகையறா]

மாற்றானின் கொடி பறக்க மாதாவே பொறுப்பாயோ
ஆற்றாமை கொண்டு இங்கே அன்னையே இருப்பாயோ?
கூற்றமாய் மாறாமல் கொடியவரை வெல்லாமல்
கொற்றவையே இருப்பாயோ?

பாட்டு 9

இயற்: கருணாநிதி பாடி: சிதம்பரம் ஜெயராமன்

வெல்க நாடு வெல்க நாடு வெல்க வெல்கவே
வீர சதங்கை நாதங்கேட்டு செல்க செல்கவே
படைகள் செல்கவே—படைகள் செல்கவே [வெல்க]
தாயின் ஆணை கேட்பதற்குத் தலைவணங்கும் தங்கமே
தலைகொடுத்து தாயின் மானம் காத்திடுவாய் சிங்கமே
சென்று வா—வென்று வா [வெல்க]
குழலைப் போல மழலை பேசும்
குழந்தைகளின் முத்தமும்
கொஞ்சுகின்ற அஞ்சுகத்தின்
கோலமொழிச் சத்தமும்
உன் குன்று தோளில் புதுபலத்தை வழங்குமடா நித்தமும்
சென்று வா—வென்று வா [வெல்க]
மகிமை கொண்ட மண்ணின் மீது எதிரிகளின் கால்கள்
எதிரிகளின் கால்கள்
மலர் பறிப்பதில்லையடா வீரர்களின் கைகள்
மாவீரர்களின் கைகள் சென்றுவா—வென்றுவா [வெல்க]
ஓங்கிய வாள்போன்ற வடிவமடா—அவர்
ஒளி விழியில் உலகத்தின் படிவமடா
வேங்கைப்புலி மன்னனடா
வீரர்களின் தலைவனடா—அவர்
கட்டளைக்கு காத்திருந்த நல்லவனே
களம் நோக்கிப் புறப்படடா வல்லவனே [வெல்க]

வணக்கம்,

# மயிர்க்கூச்செறியும் மர்மக்கதைகள்

## புதியவை!

1. கன்னிப்பெண்ணே வா! .... எம். மோகன் 0.50
2. மெஸ்மெரிஸ மாயாவி ........ சேரன் 0.50
3. கொடுத்துப்பார் ........ பி.டி.சாமி 0.50
4. நடு இரவில் கொஞ்சநேரம் .... பி.டி.சாமி 0.50
5. ஆசைநாயகியின் அந்தரங்கடைரி. சந்திரமோகன் 0.50
6. மனித வேட்டை ...... ஏ.எம்.மீரான் 0.50
7. நளினவிலாஸ் மர்மக்கொலை "இருகூரான்" 0.50
8. ஓடிப்போனஒய்யாரி .... எம்.கே.நாதன் 0.50
9. விமானசுந்தரியின் விசித்திரவிளையாட்டு எம்.கே.நாதன் 0.50
10. குறிதப்பவில்லை "கோதை" 0.50
11. மாமல்லபுரத்து மர்மம் ... "கோதை" 0.50
12. மரணமாளிகை .... தஞ்சைகுஞ்சிதபாதம் 0.50

**ஸ்ரீமகள் கம்பெனி**

122. வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1.

போன்: ... த.பெ.எண்: 275 - தந்தி: ...

கிளைகள்: மதுரை-திருச்சி-கோயமுத்தூர்-பெங்களூர்

STUDIO